16.03.2019 காலை முரளி ஓம் சாந்தி
பாப்தாதா, மதுபன்

---

இனிமையான குழந்தைகளே ! தன்னை ஆத்மா சகோதர - சகோதரன் என புரிந்து கொண்டு ஒருவர் மீது ஒருவர் ஆன்மீக அன்பு வையுங்கள். சதோபிரதானமாக வேண்டுமென்றால் யாருடைய குறைகளையும் காணாதீர்கள். (வர்ணிக்காதீர்கள்)

கேள்வி :

எந்த ஆதாரத்தில் பாபாவிடமிருந்து பல மடங்கு ஆஸ்தியை (பலன்) அடைய முடியும்?

பதில் :

பாபாவிடமிருந்து பல மடங்கு ஆஸ்தி அடைய நினைவு யாத்திரையி;ல் இருங்கள். ஒரு தந்தையைத் தவிர மற்ற அனைத்து விஷயங்களை மறந்துவிடுங்கள். இவர்கள் இப்படி செய்கிறார்கள், அவர்கள் அப்படி இருக்கிறார்கள்.... இந்த விஷயங்களில் நேரத்தை வீணாக்காதீர்கள். குறிக்கோள் மிகவும் உயர்வானது. ஆகையால் எப்போதும் சதோபிரதானமாவதற்கு இலட்சியம் வையுங்கள். பாபாவின் அன்பில் மின்னிக்கொண்டிருங்கள். தன்னை சூட்சுமமாக சோதித்துக் கொண்டே இருங்கள். அப்போது முழுமையாக சொத்தை அடைய முடியும்.

ஓம் சாந்தி:

இப்போது இங்கே அமர்ந்துள்ள குழந்தைகளாகிய உங்களை எல்லையற்ற தந்தை மீண்டும் சதோபிரதானமாக மாற்றிக்கொண்டிருக்கிறார் என நீங்கள் அறிந்துள்ளீர்கள். முக்கியமான யுக்தி தன்னை ஆத்மா சகோதர - சகோதரன் என புரிந்து கொள்ளுங்கள் என கூறுகின்றார். உங்களுக்குள் மிக மிக ஆன்மீக அன்பு இருக்க வேண்டும் என முக்கியமான அறிவுரையாகச் சொல்கிறார். முதலில் உங்களிடமிருந்தது. இப்போது இல்லை. மூலவதனத்தில் அன்பின் விஷயம் எதுவும் இருக்காது. குழந்தைகளே! தற்சமயம் நீங்கள் கீழே இறங்கி, இறங்கிப் காலம் கடந்து போய்க் கொண்டே இருக்கிறது என எல்லையற்ற தந்தை வந்து ஞானம் கற்பிக்கிறார். நாள், மாதம், வருடம் கழிந்து போய்க்கொண்டிருக்கிறது. நீங்கள் லஷ்மி நாராயணனாக இருந்தீர்கள் என பாபா கூறுகிறார். யார் உங்களை அவ்வாறு மாற்றியது? பாபா. நீங்கள் கீழே எவ்வாறு இறங்கினீர்கள் என்பதை பாபா தான் கூறுகின்றார். மேலிருந்து கீழே இறங்கி இறங்கி நேரம் சென்று கொண்டே இருக்கிறது. அந்த நாள் சென்றது, மாதம் சென்றது, வருடம் சென்றது, நேரம் சென்றது. முதன் முதலில் நாம் சதோபிரதானமாக இருந்தோம் என அறிகிறீர்கள். தங்களுக்குள் மிகவும் அன்பு இருந்தது. சகோதரர்களாகிய உங்களுக்குள் மிகவும் அன்பு இருக்க வேண்டும் என சகோதரர்களாகிய

உங்களுக்கு பாபா சொல்லிக் கொடுக்கிறார். நான் உங்களுடைய தந்தையாக இருக்கிறேன். நான் எவ்வளவு அன்போடு உங்களை பாதுகாத்து வளர்க்கிறேன். உங்களை தமோபிர தானத்திலிருந்து சதோபிரதானமாக மாற்றுகிறேன். உங்களுடைய குறிக்கோளே சதோபிரதானமாக மாறுவதுதான். எவ்வளவுக்கு எவ்வளவு சதோபிரதானமாக மாறுகின்றீர்களோ அவ்வளவு குஷியில் வருவீர்கள் என அறிகிறீர்கள். நாம் சதோபிரதானமாக இருந்தோம் நாம் சகோதர - சகோதரன், நமக்குள் மிகவும் அன்போடு இருந்தோம். இப்போது பாபா மூலமாக தேவதைகளாகிய நாம் நமக்குள் மிகவும் அன்போடு இருந்தோம் என தெரிந்து கொள்கிறோம். இந்த தேவதைகள் மற்றும் சொர்க்கத்திற்குக் கூட மிகவும் மகிமை இருக்கிறது. நீங்கள் கூட சொர்க்கவாசிகளாக இருந்தீர்கள். பிறகு இன்று இறங்கி, இறங்கி கீழே வந்துவிட்டீர்கள். ஒன்றிலிருந்து ஆரம்பித்து இன்று 5000 வருடத்தில் இன்னும் சில வருடங்கள் இருக்கிறது. ஆரம்பத்திலிருந்து நீங்கள் எவ்வாறு நடித்தீர்கள் என்பதெல்லாம் புத்தியில் இருக்கிறது. இப்போது தேக உணர்வில் இருக்கின்ற காரணத்தால் ஒருவருக்கொருவர் மீது அந்த அன்பு இல்லை. ஒருவர் மற்றவரின் குறைகளைப் பார்த்துக்கொண்டே இருக்கின்றனர். இவர்கள் இப்படி என்று. ஆத்ம உணர்வில் இருக்கும் போது இதுபோல யாருடைய

குறைகளையும் பார்க்கவில்லை, தங்களுக்குள் மிகவும் அன்பு இருந்தது. இப்போது மீண்டும் அதே நிலையைக் கடைப்பிடிக்க வேண்டும். இங்கே ஒருவர் மற்றவரை அந்த பார்வையினால் பார்ப்பதால் தங்களுக்குள் சண்டையிடுகின்றனர். இவை எப்படி முடிவடையும். இதைக்கூட பாபா புரியவைக்கிறார் குழந்தைகளே! நீங்கள் தான் சதோபிரதானமாக பூஜைக்குரிய தேவி தேவதைகளாக இருந்தீர்கள், மீண்டும் மெதுவாக கீழே விழுந்து நீங்கள் தமோபிரதானமாகி விட்டீர்கள். நீங்கள் எவ்வளவு இனிமையாக இருந்தீர்கள். இப்போது இதுபோன்று மீண்டும் இனிமையாக மாறுங்கள். நீங்கள் சுகமுடையவராக இருந்தீர்கள், இப்போது துக்கமானவர்களாக இருக்கிறீர்கள். இராவண இராஜ்யத்தில் ஒருவருக்கொருவர் துக்கம் கொடுப்பதற்காக காம விகாரத்தில் விழுகின்றனர். சதோபிரதானமாக இருக்கும் போது காம விகாரத்தில் ஈடுபடவில்லை. உங்களுடைய இந்த ஐந்து விகாரங்கள் எவ்வளவு எதிரியாக இருக்கின்றது. இதுவே விகாரங்களின் உலகம். இராம இராஜ்யம் என்று எதைக் கூறுகின்றோம், இராவண இராஜ்யம் என்று எதைக் கூறுகின்றோம் என்று உங்களுக்கு தெரியும். கீழே இறங்கி இறங்கியே என்றே சத்யுகம், திரேதா, துவாபரயுகம் முடிந்து விட்டது. இப்போது கலியுகம் கூட முடியப்போகிறது. நீங்கள் தான் சதோபிரதானத்திலிருந்து தமோபிரதானமாக

ஆகிவிட்டீர்கள். உங்களுடைய ஆன்மீக குஷி மறைந்து விட்டது. உங்கள் ஆயுள் கூட குறைந்து விட்டது. இப்போது நான் வந்திருக்கிறேன். உங்களை நிச்சயம் சதோபிரதானமாக மாற்றுவேன். நீங்கள் தான் பதீதபாவனா வாருங்கள் என அழைத்தீர்கள். 5000 வருடத்திற்குப் பிறகு சங்கமயுகம் வரும் போது நான் வருகிறேன் என தந்தை புரியவைக்கிறார். இப்போது நீங்கள் தன்னை ஆத்மா என்று உணர்ந்து தந்தையை நினையுங்கள். எவ்வளவு நினைக்கின்றீர்களோ அவ்வளவு குறைகள் வெளியேறிப்போகும். நீங்கள் சதோபிர தானமாக இருந்த போது உங்களுக்குள் எந்த குறையும் இல்லை. நீங்கள் உங்களை தேவி தேவதைகள் என்று கூறிக்கொண்டீர்கள். இப்போது இந்த குறைகள் எப்படி வெளியேறும். ஆத்மாவிற்கு தான் அசாந்தி ஏற்படுகிறது. நாம் ஏன் அசாந்தி அடைகிறோம் என இப்போது தன்னை சோதியுங்கள். நாம் சகோதர - சகோதரர்களாக இருக்கும் போது நமக்குள் மிகவும் அன்பு இருந்தது. இப்போது மீண்டும் அதே தந்தை வந்திருக்கிறார். தன்னை ஆத்மா என்றுணர்ந்து சகோதர - சகோதரன் என உணருங்கள் எனக்கூறுகின்றார். ஒருவர் மற்றவர் மீது அன்பு வையுங்கள். தேக உணர்வில் வருவதால் ஒருவர் மற்றவரின் குறைகளைக் காண்கிறீர்கள். நீங்கள் உயர்ந்த பதவி அடைய தன்னுடைய முயற்சி செய்யுங்கள் என பாபா கூறுகின்றார். நம்மை நிறைத்துக் கொள்ளும் படியாக

நமக்கு தந்தை சொத்து கொடுத்தார் என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்போது தந்தை வந்திருக்கிறார் என்றால் ஏன் நாம் அவருடைய வழிப்படி சென்று மீண்டும் முழுமையாக சொத்தை அடையக்கூடாது? நாம் தான் தேவதையாக இருந்ததோம் பிறகு 84 பிறவிகள் எடுத்தோம்.

நீங்கள் இனிமையிலும் இனிமையான குழந்தைகள் எவ்வளவு நிலையாக இருந்தீர்கள். எந்த ஒரு கருத்து வேறுபாடும் இல்லை; யாரையும் நிந்திக்கவும் இல்லை. இப்போது ஏதாவது குறைகள் இருக்கிறது. அவை அனைத்தையும் நீக்கிவிடுங்கள். நாம் அனைவரும் சகோதர - சகோதரர்கள். ஒரு தந்தையை மட்டுமே நினைக்கவும், நாம் சதோபிரதானமாக மாறவேண்டும் என்ற விருப்பம் இருக்க வேண்டும். இவர்கள் இப்படிப் பட்டவர்கள், இவர் இப்படி செய்தார் - இது போன்ற அனைத்து விஷயங்களையும் மறக்க வேண்டும். இவை யனைத்தையும் விட்டு விட்டு தன்னை ஆத்மா என்றுணருங்கள் என பாபா கூறுகின்றார். இப்போது சதோபிர தானமாக மாறுவதற்காக முயற்சி செய்யுங்கள். தேக உணர்வில் வருவதால் தான் அவகுணம் தென்படுகிறது. தன்னை ஆத்மா எனறுணர்ந்து அப்பாவை நினையுங்கள். சகோதரன் - சகோதரன் என பார்த்தால் குணங்கள் மட்டுமே தெரியும். அனைவரையும் குணமுடையவர்களாக

மாற்ற முயற்சி செய்யுங்கள். ஏதாவது தலைகீழாக என்ன செய்தாலும் இவர்கள் தமோ அல்லது ரஜோபிரதானமாக இருப்பதால் நிச்சயமாக இவர்களுடைய நடத்தை இவ்வாறு தான் இருக்கும் என புரிந்து கொள்ளப்படுகிறது. எல்லோரையும் விட அதிகமான குணம் தந்தைக்குள் இருக்கிறது. ஆகையால் தந்தையிடமிருந்து குணங்களைக் கிரகியுங்கள். மற்ற அனைத்து விஷயங்களையும் விட்டு விடுங்கள். அவகுணங்களை விட்டு நற்குணங்களைக் கடைபிடியுங்கள். தந்தை எவ்வளவு குணவானாக மாற்றுகிறார். குழந்தைகளாகிய நீங்களும் கூட எனக்குச் சமமாக குணவானாக வேண்டும் என கூறுகிறார். தந்தை சுகமுடையவராக இருக்கிறார் நாம் கூட சுகமுடையவராக வேண்டும். நாம் கூட சதோபிரதானமாக மாறவேண்டும் என்ற கவலை (அக்கறை) இருக்க வேண்டும், அவ்வளவு தான் மற்ற எந்த விஷயத்தையும் கேட்காதீர்கள், நிந்திக்காதீர்கள். அனைவருக்குள்ளும் ஏதாவது குறைகள் இருக்கிறது. குறைகள் கூட யாரும் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு இருக்கிறது. மற்றவர்கள் இவருக்குள் குறை இருக்கிறது என புரிந்து கொள்கின்றனர். அவர்கள் தன்னை எந்த குறையும் இல்லாமலிருப்பவர்களாக நினைக்கின்றனர். ஆனால் எங்காவது தலைகீழான வார்த்தை வெளிவந்துவிடுகிறது. சதோபிரதானமான நிலையில் இந்த விஷயங்கள் ஏற்படாது. இங்கே

குறைகள் இருக்கின்றது. ஆனால் புரிந்து கொள்ளாத காரணத்தால் தனக்கு எல்லாம் தெரியும் என நினைத்துக் கொள்கின்றனர். எல்லாம் அறிந்தவர் நான் மட்டுமே, உங்கள் அனைவரையும் இனிமையாக மாற்ற வந்திருக்கின்றேன் என தந்தை கூறுகின்றார். அனைத்து அவகுணங்களையும் விட்டு விடுங்கள். தன்னுடைய நாடியையைப் பாருங்கள் நாம் எவ்வளவு இனிமையிலும் இனிமையான ஆன்மீக தந்தையை அன்போடு நினைக்கின்றோம். நான் எவ்வளவு புரிந்து கொண்டு இருக்கின்றேனோ அவ்வளவு மற்றவர்களுக்கும் புரியவைக்கின்றேன் என்று. தேக உணர்வில் வருவதால் எந்த நன்மையும் இல்லை முக்கியமான விஷயம் உலகம் தமோபிரதானமாக இருக்கிறது என்பதைப் புரியவைக்க வேண்டும். சதோபிரதானமாக இருந்த போது தேவதைகளின் இராஜ்யம் இருந்தது. இப்போது 84 ஜன்மங்கள் அனுபவித்து தமோபிரதானமாக இருக்கின்றனர் மீண்டும் இப்போது சதோபிரதானமாகவேண்டும். தமோபிரதானமாக பாரதவாசிகள் தான் மாறியிருக்கின்றனர் மேலும் சதோபிரதானமாகவும் அவர்களே மாறுவார்கள் வேறு யாரையும் சதோபிரதானம் என கூறமுடியாது. சத்யுகத்தில் எந்த தர்மமும் இல்லை. நீங்கள் பல முறை தமோபிரதானத்தில் இருந்து சதோபிரதானமாக மாறியிருக்கின்றீர்கள். இப்போது மீண்டும் மாறுங்கள்

என பாபா கூறுகின்றார். ஸ்ரீமத் படி நடந்து என்னை நினையுங்கள் இதே விருப்பம் தான் வேண்டும். பாவம் தலை மீது அதிமாக இருக்கின்றது.. தந்தை இப்பொழுது எழுப்பியிருக்கிறார். தேவதைகளுக்கு முன்பு சென்று நாங்கள் விகாரி என கூறுகின்றனர். ஏனென்றால், தேவதைகளுக்குள் பவித்திரதாவின் (தூய்மை) கவர்ச்சி இருக்கிறது. ஆகையால் அவர்களுக்கு முன்பு சென்று கூறுகின்றனர். பிறகு வீட்டிற்குச் சென்றதும் மறந்து விடுகின்றனர். தேவதைகளுக்கு முன்பு செல்லும் போது தன் மீதே வெறுப்பு வருகிறது. வீட்டிற்குச் சென்றால் எந்த வெறுப்புமில்லை. இவர்களை இவ்வாறு மாற்றுவது யார் என்று கூட சிந்திப்பது இல்லை. தேவதைகள் ஆக வேண்டும் எனில் இந்த படிப்பை நன்கு படியுங்கள் என தந்தை கூறுகின்றார். ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். முதன் முதலில் தன்னை சதோபிரதானமாக ஆக்க வேண்டும் என்றால் என்னை மட்டும் நினையுங்கள். வேறு எந்த வீண் விஷயத்தையும் பேசாதீர்கள் என தந்தை கூறுகின்றார். நாம் இப்படி மாற வேண்டும் என்று தனக்கு தானே ஆர்வம் வையுங்கள். நீங்கள் தான் ஆதி சனாதன தேவி தேவதா தர்மத்தினர், பிறகு எங்கே சென்றீர்கள் என்பதைப் பாபா கூறுகின்றார். இவர்களுடைய 84 ஜன்மங்களின் கதை எழுதப்பட்டிருக்கிறது. இப்போது நாம் இவ்வாறு மாற வேண்டும். தெய்வீக குணங்களை கடைப்பிடிக்க வேண்டும். சகோதர - சகோதரன் என

புரிந்து கொண்டு அப்பாவை நினைக்க வேண்டும். தந்தையிடமிருந்து சொத்தை ஆஸ்தி அடைய வேண்டும். இகழ், புகழ் அனைத்தும் செய்தே வந்தோம் என புத்தியில் வரவேண்டும். உண்மையில் புகழ் என்பது ஒன்றுமில்லை நிந்தனை இருக்கிறது. ஒருவரை ஒருபக்கம் புகழ்கின்றனர், மற்றொரு பக்கம் நிந்திக்கவும் செய்கின்றனர். ஏனென்றால் ஒருபக்கம் தந்தையின் மகிமை செய்கின்றனர் இன்னொரு பக்கம் சர்வவியாபி எனக்கூறிவிடுகின்றனர், ஏனென்றால் அறியவில்லை. கல்லிலும், முள்ளிலும் பரமாத்மா என்று சொல்வதால் பாராமுகமாகி விட்டனர். வினாச காலத்தில் விபரீதமாக பாராமுக தந்தையை புரிந்து கொள்ளாத புத்தி இருப்பதால் அழிவு தான். வினாச காலத்தில் சரியாக அறிந்துள்ள புத்தி வெற்றி தரும்.

எவ்வளவு முடியுமோ தந்தையை நினைப்பதற்கு முயற்சி செய்யுங்கள். முன்பு கூட நினைவு செய்தீர்கள் அது பலரின் (!தேவதைகள்) நினைவாக இருந்தது. நிறைய பேரை நினைவு செய்தீர்கள் இப்போது அவ்விபச்சாரி (ஒரே ஒருவர்) நினைவில் இருங்கள் என தந்தை கூறுகின்றார். என்னை மட்டுமே நினையுங்கள். பக்தி மார்க்கத்தில் நிறைய சித்திரங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் நீங்கள் நினைவு செய்து வந்துள்ளீர். இப்போது மீண்டும் சதோபிரதானமாக வேண்டும். அங்கே நினைப்பதற்கு பக்திமார்க்கமே இல்லை. நாம்

சதோபிரதானமாக எப்படி மாறுவது என்ற கவலை கொள்ள வேண்டும் என்று பாபா கூறுகின்றார். இந்த சிருஷ்டி சக்கரம் எவ்வாறு சுழல்கிறது என்ற ஞானம் கிடைத்துவிட்டது; அது எளிதாக இருக்கிறது. நன்று, சிலருக்கு வாய் மூலமாக புரியவைக்க முடியாது. ஆனால் நாம் சதோபிரதானத்திலிருந்து தமோபிரதானமாக எப்படி மாறுகின்றோம் என்பது நிச்சயம் புத்தியில் வரும். இப்போது மீண்டும் சதோபிரதானமாக நிச்சயம் மாறவேண்டும். யாராவது பேச முடியவில்லை என்றால் அவர்களுடைய அதிர்ஷ்டம் அவ்வளவு தான் என கூறுவார்கள் விதியும் கூட அப்படி உள்ளது. . பேட்ஜ்ஜை வைத்து புரிய வைப்பது எளிது இவர்தான் எல்லையற்ற தந்தை. பாபா மிகவும் எளிதான வழியை தெரிவித்திருக்கிறார். இவரிடமிருந்து தான் ஆஸ்தி கிடைக்கிறது. தந்தை நிச்சயமாக சொர்க்கத்தை ஸ்தாபனை செய்கின்றார். அதையும் நிச்சயம் இங்கே தான் செய்வார். சிவஜெயந்தி என்றால் சொர்க்கத்தின் ஜெயந்தி. சொர்க்கத்தில் தேவி தேவதைகள் இருக்கிறார்கள். மீண்டும் அவர்கள் எப்படி அது போல ஆனார்கள்? அவர்கள் இந்த புருஷோத்தம சங்கமயுகத்தில் படிப்பினால் மாறினார்கள். குழந்தைகளாகிய உங்களுக்கு புரிந்து கொள்ளும் திறன் கிடைத்திருக்கிறது. மீண்டும் மற்றவர்களுக்குக் கூட இதை புரிய வைக்க வேண்டும். உங்களுடையது எளிதான ஞானம் மற்றும் எளிதான யோகம், எளிதான

சொத்து. ஆனால் இங்கே சிலர் ஒரு நயா பைசா அளவு சொத்து பெறக்கூடியவராகவும் இருக்கின்றனர். சிலர் பல கோடி மடங்கு சொத்தை அடையக்கூடியவராகவும் இருக்கின்றனர். அனைத்து பதவியும் படிப்பில் தான் இருக்கிறது. நினைவு யாத்திரையால் மற்ற அனைத்து விஷயங்களையும் மறந்துவிடுங்கள். இவர்கள் இப்படிப் பட்டவர்கள்.. இதில் நேரத்தை வீணாக்காதீர்கள் குறிக்கோள் மிகவும் உயர்ந்தது. சதோபிரதானமாக மாறுவதில் தான் மாயை தடையை ஏற்படுத்துகிறது. படிப்பில் தடை எதுவும் இல்லை. நமக்கு படிப்பின் மீது எவ்வளவு அன்பு இருக்கிறது என தன்னையே பாருங்கள் என பாபா கூறுகின்றார். அன்பு என்பது தந்தையுடனே நிரந்தரமாக இருக்கும் படி போன்றதாக இருக்க வேண்டும். சொல்லிக் கொடுக்கக்கூடியவர் தந்தை இவருடைய (பிரம்மா) ஆத்மா கற்பிக்க வில்லை இவர்கூட கற்றுக்கொள்கிறார். பாபா தாங்கள் எங்களை எவ்வளவு புத்திசாலியாக மாற்றியிருக்கிறீர்கள். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் நீங்களே, பிறகு மனித சிருஷ்டியில் கூட நீங்களே. எங்களை எவ்வளவு உயர்ந்தவர்களாக மாற்றுகின்றீர்கள்; இது போன்று உள்ளுக்குள் தந்தையின் மகிமையை பாராட்ட வேண்டும். தந்தையே நீங்கள் எவ்வளவு அதிசயம் செய்கின்றீர்கள்! தந்தை கூறுகின்றார் குழந்தைகளே நீங்கள் மீண்டும் உங்கள் இராஜ்யத்தை அடையுங்கள், குஷியோடு

என்னை மட்டும் நினையுங்கள். நாம் பாபாவை எவ்வளவு நினைக்கின்றோம் என தன்னையே கேளுங்கள். குஷியைப் போன்ற சத்தான உணவு வேறு எதுவுமில்லை என்பார்கள். பாபாவை சந்திப்பது கூட குஷிதான்; ஆனால் இவ்வளவு குஷி குழந்தைகளுக்கு உள்ளே இருப்பதில்லை. அப்படியிருந்தால், மிகவும் குஷியாக இருக்க வேண்டும் என விவேகம் கூறுகின்றது. இந்த படிப்பினால் நாம் இந்த இராஜாவாக ஆகின்றோம். எல்லையற்ற அப்பாவின் குழந்தைகள் நாம், சுப்ரீம் தந்தை நம்மை படிக்க வைக்கிறார். பாபா எவ்வளவு இரக்க மனமுடையவராக இருக்கிறார்! எப்படி வந்து குழந்தைகளாகிய உங்களுக்குள் புது புது விஷயங்களைக் கூறுகின்றார். இப்போது உங்களுடைய புத்தியி;ல் மிகவும் புதுப்புது விஷயங்கள் இருக்கிறது இவை வேறு யாருடைய புத்தியிலும் இல்லை நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே

தாரணைக்கான முக்கிய சாரம் :-

1. ஆத்ம அபிமானி நிலையைக் கடைபிடித்து சுகமுடையவராக வேண்டும். யாருடைய

குறைகளையும் சிந்திக்காதீர்கள். உங்களிடையே ஒருவருக்கொருவர் மிக மிக அன்போடு இருங்கள். கருத்து வேறுபாட்டில் வராதீர்கள்.

2. மற்ற அனைத்து விஷயங்களையும் விட்டு விட்டு ஒரு தந்தையிடமிருந்து குணத்தை கிரகியுங்கள். சதோபிரதானமாக மாற வேண்டும் என கவலைப்படுங்கள். யாருடைய விஷயத்தையும் கேட்கக்கூடாது நிந்திக்கவும் கூடாது. எல்லாம் அறிந்தவர் ஆகக்கூடாது.

வரதானம்:

ஒளியின் ஆதாரத்தில் ஞான - யோகத்தின் சக்திகளை பிரயோகிக்கக்கூடிய நடைமுறைபடுத்தும் (Application) ஆத்மா ஆகுக.

எவ்வாறு இயற்கையின் ஒளி விஞ்ஞானத்தின் பலவிதமான உபயோகத்தை நடைமுறையில் செய்து காட்டுகிறன்றது. அவ்வாறு நீங்கள் அழிவற்ற பரமாத்ம ஒளி, ஆத்மீக ஒளி மற்றும் கூட கூடவே நடைமுறையில் மனநிலையை லைட்(இலேசான தன்மை) மூலமாக ஞானம் மற்றும் யோகத்தின் சக்திகளை பயன்படுத்துங்கள். மனநிலை மற்றும் சொரூபம் டபுள் லையிட்டாக இருக்கும்போது தான். பிரயோகிப்ப தன் பயனை வெற்றியை மிகவும்

எளிதாக்குகிறது. ஒவ்வொருவரும் தனக்காக பயன்படுத்தினால் பயன் படுத்தக்கூடிய ஆத்மாக்களின் சக்திவாய்ந்த (பவர்ஃபுல்) குழு உருவாகிவிடும்.

சுலோகன்:

தடைகளின் அம்சம் மற்றும் வம்சத்தை அழிக்கக்கூடியவரே தடைகளை வென்றவர் ஆகுக.